[1987 நவம்பர் 17

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிசை மாற்றுவாரியம் குடியிருப்புகளைப் புதிதாகக் கட்டுகிறபோது, யார் யார் அந்தப் பகுதியில் குடிசைகளில் வாழ்ந்தார்களோ அவர்களைக் குடியமர்த்தத்தான் குடிசை மாற்று வாரியம் வீடுகளைக் கட்டித் தருகிறது. அப்படிக் கட்டித் தரும்போது ஏற்கெனவே அந்தப் பகுதியில் யார் யார் வாழ்ந்தார்களோ—அவர்கள் ஆதிதிராவிடர்களாக இருந்தாலும் சரி அல்லது வேறு எந்த சமுதாயத்தைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் சரி—அவர்கள்தான் குடிசைமாற்று வாரியத்தால் அங்கே கட்டப்பட்ட புதிய வீடுகளில் குடியமர்த்தப்படுகிறார்கள். தனியாக ஆதிதிராவிடர்களுக்கு இத்தனை சதவீதம் என்று ஒதுக்கீடு இல்லை. அவர்களுக்கு தாட்கோ மூலமாகவும் மற்ற பிற அமைப்புகள் மூலமாகவும் வீடுகள் கட்டித் தரப்படுகின்றன.

திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிசைப்பகுதிகளில் கட்டப்படுகிற குடியிருப்புகள் சொந்தமாக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அந்தப் பணி எப்போது நடைபெறும்? அதற்கான கொள்கை முடிவினை அறிவித்தாகி, பூர்வாங்க வேலைகள் தொடங்கப்பட்டாகிவிட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியாகக் கேள்வி போட்டால் பதில் தருகிறேன்.

திருப்பத்தூர் நகரில் வீட்டுவசதி வாரிய வீடுகள்.

162—(* வினா எண் 9621) திரு. எஸ். பி. மணவாளன் : மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பத்தூர் நகரில் வீட்டுவசதி வாரியத்தின் மூலம் வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

1987 நவம்பர் 17]

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) நிலம் கையகப்படுத்தும் பணி முடிவு பெற்றதும், அந்தப் பகுதியில் வீட்டுவசதி வாரியத் திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்படும்.

திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீடுகள் கட்டுவதற்காக எத்தனை ஏக்கர் நிலம் கையகப் படுத்தப்பட்டுள்ளது ? பல ஆண்டுகளாக நிலம் கையகப்படுத்து வதில் உள்ள தாமதத்தைப் போக்கி விரைவான நடவடிக்கை மேற் கொள்ள அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே திருப்பத்தூரில் வீட்டுவசதி வாரியத்தால் குறைந்த வருவாய்ப் பிரிவினருக்கு ஏறக்குறைய ரூ. 40 லட்சம் செலவில் 162 குடியிருப்புகளும், ரூ. 10 லட்சம் செலவில் நடுத்தர வருவாய்ப் பிரிவினருக்கு 10 குடியிருப்புகளும், ரூ. 96 இலட்சம் செலவில் அரசு ஊழியர்களுக்கு வாடகை வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் 96 குடியிருப்புகளும் கட்டி முடிக்கப் பட்டுள்ளன. இதைத் தவிர தமிழக அரசு ஊழியர்களுக்கு வாடகை வீட்டு வசதி திட்டத்தின் கீழ் ரூ. 90 இலட்சம் செலவில் 66 குடியிருப்புகள் கட்டுவதற்கு அரசால் முன்னுரிமை அடிப்படை யில் திருப்பத்தூர் தெரிவு செய்யப்பட்டிருக்கிறது. இதற்குத் தேவைப்படும் 107 ஏக்கரில் ஏறக்குறைய 96 ஏக்கர் நிலம் வரை இறுதி வரைவு அறிக்கை, அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டிருக் கிறது. இந்த நிலங்கள் வீட்டுவசதி வாரியத்தால் கையகப் படுத்தப்பட்ட உடன், உடனடியாக இந்தப் பணிகள் துவங்கப் படும்.

கிராம கூட்டுறவு வீடு கட்டும் சங்கங்கள்.

163—(*வினா எண் 9664) திரு. ஆர். ரெங்கசாமி : மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராம கூட்டுறவு வீடுகட்டும் சொசைட்டிகள் கிராம மக்களுக்கு கடன் வழங்குவதை நிறுத்தியும் செயல் ஆற்றாமலும் உள்ளன என்பதை அரசு அறியுமா ?